# மனநலத்திறன் சட்டம்:

# பராமரிப்பாளர்களுக்கான ஒரு வழிகாட்டி

OFFICE OF THE
PUBLIC
GUARDIAN

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| **பகுதி A** | **மனநலத்திறன் சட்டம் என்றால் என்ன மற்றும் நான் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்?** | **04** |
| | A1. மனநலத்திறன் என்றால் என்ன? | 04 |
| | A2. மனநலத்திறன் சட்டம் என்பது என்ன மற்றும் எங்களுக்கு இந்தச் சட்டம் ஏன் முக்கியமானது? | 05 |
| **பகுதி B** | **பொதுக் காப்பாளர் அலுவலகம் என்ன செய்யும்?** | **06** |
| | B1. பொதுக் காப்பாளர் | 06 |
| | B2. பொதுக் காப்பாளரின் பணிகள் | 06 |
| | B3. பொதுக் காப்பாளர் அலுவலகம் | 07 |
| | B4. வருகையாளர் வாரியத்தின் பங்குகள் | 07 |
| **பகுதி C** | **மனநலத் திறன் சட்டத்தின் கீழ் உள்ள ஐந்து சட்டபூர்வமான நெறிகள்** | **08** |
| | C1. அறிமுகம் | 08 |
| | C2. இச்சட்டத்தின் ஐந்து சட்டபூர்வமான நெறிகள் | 08 |
| | C3. நான் இந்த ஐந்து சட்டபூர்வமான நெறிகளை எவ்வாறு பயன்படுத்துவது? | 09 |
| **பகுதி D** | **மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களை இந்த மனநலத்திறன் சட்டம் எவ்வாறு பாதுகாக்கிறது?** | **16** |
| | D1. துன்புறுத்தல் உள்ளதாக எவரேனும் சந்தேகப்பட்டால் என்ன நடக்கும்? | 16 |
| | D2. காட்டிக்கொடுப்போர் பாதுகாப்பு | 17 |

| | | |
|---|---|---|
| **பகுதி E** | **மனநலத்திறன் மதிப்பீட்டைப் பற்றி நான் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்?** | **18** |
| | E1. "மனநலத்திறன் குறைபாடு" என்பதன் பொருள் என்ன? | 18 |
| | E2. ஒருவருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளதா இல்லையா என்று முடிவு செய்பவர் யார்? | 19 |
| | E3. ஒருவரின் மனநலத்திறன் எப்போது மாறக்கூடும்? | 20 |
| **பகுதி F** | **பராமரிப்பாளர்களுக்கான சரிபார்ப்புப் பட்டியல்** | **21** |
| | F1. சரிபார்ப்புப் பட்டியல் | 21 |
| | F2. பராமரிப்புத் திட்டங்கள் | 25 |
| **பகுதி G** | **மேல் விவரங்களை நான் எங்கு தேடலாம்?** | **26** |
| | **விளக்கச்சொற்கள்** | **28** |




இச்சிற்றேடு பராமரிப்பாளர்களாக இருப்போருக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. நீங்கள் பராமரிக்கும் ஒருவர் அவரது சொந்த முடிவைச் செய்வதற்கு உதவும் வகையில் நீங்கள் எடுக்க வேண்டிய நடைமுறைக்கேற்ற நடவடிக்கைகளின் சுருக்கமான விவரிப்பை இது உங்களுக்கு வழங்குகிறது.

பராமரிப்பாளர் என்ற முறையில் மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் மிகச்சிறந்த நலனுக்காக அவரது சார்பாக பரிசீலனைகள் செய்து முடிவுகள் எடுப்பது உங்களின் பொறுப்பு.

இந்த வழிகாட்டியில் உள்ள கற்பனைக் காட்சி அமைப்புகளும், உதாரணங்களும் வெறும் விளக்கமளிக்க உதவும் எடுத்துக்காட்டுகள் மட்டுமே. இவை கற்பனைக் கதாபாத்திரங்களையும் சூழ்நிலைகளையும் பயன்படுத்துகின்றன. அவை ஏற்ற வழக்குகளுக்கான தொழில்முறை ஆலோசனைக்கு மாற்றானவை அல்ல. அதோடு, ஒத்த சூழ்நிலைகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவகளுக்கு எந்த வகையிலும் அவை பயன்படுத்தப்படக்கூடிய முன்னோடி முடிவாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. அவை எந்த ஒரு வழக்கிலும் ஒரு நீதிமன்றம் எவ்வாறு முடிவெடுக்கும் என்று சுட்டிக்காட்டுபவை அல்ல. இதில் உதாரணங்களில் விவரிக்கப்படாத, தகுந்த அடிப்படை உண்மைகளும் அடங்கலாம்.

# நாம் தொடங்கும் முன்

# பகுதி A


## மனநலத்திறன் சட்டம் என்றால் என்ன மற்றும் நான் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்?

### A1. மனநலத்திறன் என்றால் என்ன?

திட்டவட்டமான ஒரு முடிவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்ய ஒரு நபருக்குள்ள திறமையே மனநலத்திறன் என்பதாகும்.

மனநலத்திறன் ஒவ்வொரு தனித்தனி வழக்கின் அடிப்படையிலும் மதிப்பிடுகிறது. ஒரு நபர் அவதிப்படும் ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிலையை மட்டும் அடிப்படையாக கொண்டு அது அனுமானிக்கப்படக்கூடாது. மேலும், ஒரு நபரின் மனநலத்திறன் குறைபாடு கீழ்க்கண்டவற்றை மட்டும் அடிப்படையாக கொண்டிருக்கக்கூடாது.

- வயது;
- ஒருவரின் புறத்தோற்றம் – இதில் குறிப்பிட்ட நிலைகளுக்கான சில உடலியல் குணாதிசயங்கள், (எடுத்துக்காட்டுக்கு, டவுன்ஸ் சிண்ட்ரம்- Down syndrome என்ற உயிரணுக் கோளாறு அல்லது மூளை நோயால் ஏற்படும் தசை இழுப்பு ஆகியவற்றுடன் இணைந்த முகத்தோற்றம்) ஆகியவற்றுடன் சேர்த்து, புறத்தோற்றத்தின் பண்புகளான ஆடை அணிவது அல்லது தூய்மை நிலை ஆகியவையும் அடங்கும்;
- நிலைமை – இதில் உடல் ஊனங்கள், வயது முதிர்வைச் சார்ந்த நோய்கள் அல்லது குடிபோதை போன்ற தற்காலிக நிலைகள் ஆகியவையும் அடங்கும்; அல்லது
- நடத்தையின் பண்பு – இதில் மற்றவர்களுக்கு அசாதரணமாக தோன்றும் நடத்தை, எடுத்துக்காட்டுக்கு, முன்னும் பின்னும் அசைந்தாடுவது, தனக்குத் தானே பேசிக்கொள்வது, அல்லது பொருத்தமற்ற வகையில் சிரிப்பது ஆகியவற்றை உள்ளடக்கலாம். பகட்டான நடத்தை எடுத்துக்காட்டுக்கு, சத்தம் போடுவதும், சைகைகள் காட்டுவதும், மற்றும் தளர்ந்தொதுங்கும் நடத்தையான பேச மறுப்பது அல்லது கண் தொடர்பைத் தவிர்ப்பது ஆகியவையும் அடங்கும்.





### A2. மனநலத்திறன் சட்டம் என்பது என்ன மற்றும் எங்களுக்கு இந்தச் சட்டம் ஏன் முக்கியமானது?

மனநலத்திறன் சட்டம் (சட்டம்) மக்கள் தங்களின் மனநலத்திறனை இழப்பதற்கு முன்னரே முன்னோக்கி திட்டமிடுவதைச் சாத்தியமாக்குவதுடன் தங்களின் எதிர்காலத்திற்காக விருப்பத்தேர்வுகள் செய்யும் ஆற்றலையும் வழங்குகிறது. 21 வயது அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடையவர்கள் தாங்களாகவே முடிவுகள் செய்ய மனநலத்திறன் இல்லாத நிலையில் அம்முடிவுகளை அவர்களின் சார்பாகச் செய்யவேண்டிய அவசியத்தை அது கையாளுகிறது.

சட்டம் மேலும்:

a. எதிர்காலத்தில் தாங்கள் மனநலத்திறனை இழந்துவிட்டாலோ மற்றும் இழக்கும் போதோ அவர்களின் சார்பாகச் செயல்படவும் முடிவுகள் எடுக்கவும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களையோ (அதிகாரம் பெறுநர்கள்) நியமிக்க ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரத்தைத் (Lasting Power of Attorney, LPA) தன்னிச்சையாகச் செய்ய அனுமதி அளிக்கிறது;

b. மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் சார்பாக ஒரு முடிவைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்போது முடிவெடுக்கும் பிரதிநிதி இல்லாது போனால், செயல்படுவதற்கும், முடிவுகள் எடுப்பதற்கும் மற்றும் செயல்படவும் நீதிமன்றம் ஒரு துணை அதிகாரம் பெறுநரை அனுமதிக்கிறது;

c. அறிவாற்றல் ஊனமுற்ற பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர் தங்களை அவர்தம் பிள்ளைகளின் துணை அதிகாரம் பெறுர்களாகவும் தங்களுக்கு மரணம் அல்லது மனநலத்திறன் குறைபாடு நிகழும் தருவாயில் தங்களுக்குப் பின் வரும் துணை அதிகாரம் பெறுநர்களாக மற்றொரு நபரை நியமிக்கவும் நீதிமன்றத்திடம் விண்ணப்பம் செய்ய அனுமதி வழங்குகிறது;

d. மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் மிகச்சிறந்த நலனுக்காக செய்யப்பட்டது என்ற நிபந்தனை உள்பட சில நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டால் மட்டுமே பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பாக எவரேனும் செய்யும் செயல்களுக்கு சட்டம் பாதுகாப்பை வழங்குகிறது;

e. மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகிறது;

f. மனநலத்திறன் குறைபாடுள்ளவர் போல் தோற்றம் அளிக்கும் ஒரு நபரின் சார்பாக ஏதேனும் முடிவெடுக்கும் அல்லது ஏதேனும் நடவடிக்கை எடுக்கும் எவரேனும் பின்பற்ற வேண்டிய ஐந்து சட்டபூர்வ நெறிகளைக் கொண்டுள்ளது; மேலும்

g. பொதுக் காப்பாளர் என்ற புது அலுவலரை உருவாக்கியுள்ளது. இவரது பணிகளில், நீண்டகால அதிகாரப் பத்திரங்களுக்கான (LPA) ஒரு பதிவேட்டையும், துணை அதிகாரம் பெறுநர்களை நியமிக்கும் நீதிமன்ற ஆணைகளுக்கான ஒரு பதிவேட்டையும் பேணுவது, துணை அதிகாரம் பெறுநர்களை மேற்பார்வை செய்வது மற்றும் அதிகாரம் பெறுநர்கள், துணை அதிகாரம் பெறுநர்கள் ஆகியோரின் மீதான துன்புறுத்தல் குற்றச்சாட்டைக் கையாளுவது ஆகியவை அடங்கும்.

# பகுதி B

## பொதுக் காப்பாளர் அலுவலகம் என்ன செய்யும்?

### B1. பொதுக் காப்பாளர்

மனநலத்திறன் குறைபாடுள்ள, எளிதில் பாதிக்கப்படக்கூடிய தனி நபர்களின் கண்ணியம் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் பொதுக் காப்பாளர் செயல்படுகிறார். அவர் பொதுக் காப்பாளர் அலுவலகத்தின் தலைவரும் ஆவார்.

### B2. பொதுக் காப்பாளரின் பணிகள்

மனநலத்திறன் குறைபாடுள்ள நபர்களை இயலச்செய்வதையும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதையும் நோக்கிச் செயல்படும் பலதரப்பட்ட பணிகளைப் பொதுக் காப்பாளர் செய்கிறார்.

இப்பணிகளில் கீழ்க்கண்டவையும் அடங்கும்:

a. நீண்டகால அதிகாரப் பத்திரங்களுக்கான ஒரு பதிவேட்டையும் துணை அதிகாரம் பெறுநர்களை நியமிக்கும் நீதிமன்ற ஆணைகளுக்கான பதிவேட்டையும் பேணுவது;

b. துணை அதிகாரம் பெறுநர்களை மேற்பார்வை செய்வது;

c. துணை அதிகாரம் பெறுநர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது; மேலும்

d. மனநலத்திறன் சட்டத்தின் கீழ் உள்ள ஏதேனும் விதி மீறப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டை விசாரிப்பது. இதில் அதிகாரம் பெறுநர்களும், துணை அதிகாரம் பெறுநர்களும் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தும் முறையைக் குறித்த புகார்களும் அடங்கும்.

### B3. பொதுக் காப்பாளார் அலுவலகம்

- பொதுக் காப்பாளர் அலுவலகம் தன் பணிகளைச் செயல்படுத்த ஆதரவளிக்கிறது.
- பொதுக் காப்பாளர் அலுவலகம் சமுதாய, குடும்ப மேம்பாடு அமைச்சின் ஒரு பிரிவு ஆகும்..

### B4. வருகையாளர் குழுவின் பங்குகள்

வருகையாளர் குழுவின் பங்குகள் பின்வருமாறு:

- பொதுக் காப்பாளரின் அல்லது நீதிமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களையும், அதிகாரம் பெறுநர்களையும் மற்றும் துணை அதிகாரம் பெறுநர்களையும் சென்று பார்ப்பது, மற்றும்
- மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு நபரின் நலனைக் கண்டறிவது.

இரண்டு வகை வருகையாளர்கள் உள்ளனர்:

a. சிறப்பு வருகையாளர்கள் – பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் அல்லது மன அல்லது மூளைச் செயல்பாட்டில் ஏற்படும் சேதம் அல்லது குழப்ப நிலை போன்றவற்றைக் குறித்து தகுந்த ஆழ்ந்த அறிவு உள்ளவர்கள்; மேலும்

b. பொது வருகையாளர்கள் – மருத்துவம் சார்ந்த தேர்ச்சி பெற்றிருக்கும் அவசியம் இல்லாதவர்கள்.



# பகுதி C

## மனநலத்திறன் சட்டத்தின் கீழ் உள்ள ஐந்து சட்டப்பூர்வ நெறிகள்

### C1. அறிமுகம்

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு மனிதரைப் பராமரிக்கும் போது, நீங்கள் அந்த ஐந்து சட்டபூர்வ நெறிகள் மற்றும் சட்ட நடைமுறை விதித் தொகுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

மனநலத்திறன் சட்டம் (சட்டம்) கீழ்க்கண்ட சூழல்களில் உங்களுக்குச் சட்டம் சார்ந்த பாதுகாப்பை வழங்குகிறது:

- நீங்கள் அச்செயலைச் செய்வதற்கு முன் கேள்வியில் இருக்கும் விவகாரத்தைக் குறித்து அந்நபருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளதா என்று உறுதிப்படுத்த எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் எடுத்திருந்தால், மற்றும்
- நீங்கள் அந்நபருக்கு மனநலத்திறன் குறைபாடு உள்ளதெனவும், செய்யப்படவிருக்கும் செயல் அந்நபரின் மிகச்சிறந்த நலனுக்காகவே எனவும் நியாயமாக நம்பியிருந்தால்.

### C2. சட்டடத்தின் ஐந்து சட்டபூர்வமான நெறிகள்

தன் சொந்த முடிவுகளைச் செய்வதற்கு ஒரு நபருக்கு இருக்கும் உரிமைகளையும், அந்த முடிவுகளைச் செய்ய அவருக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் போது அவரைப் பாதுகாக்கும் அவசியத்தையும் சமநிலைப்படுத்த சட்டம் முயல்கிறது .

முடிவு செய்யும் செய்முறையில் முடிந்த அளவு ஒரு தனி நபர் ஈடுபாடு கொள்ளவும், அவ்வாறு செய்ய அவருக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் போது அவரைப் பாதுகாக்கவும் ஐந்து சட்டபூர்வமான நெறிகளைச் சட்டம் வரையறுத்துள்ளது. குறிப்பிட்ட முடிவுகளைச் செய்வதற்கு மக்களுக்கு உதவுயும், ஆதரவும் வழங்குவதுதான் உள்கருத்தேயன்றி அவர்களைத் தடை செய்வதும், கட்டுப்படுத்துவதும் அல்ல.

மனநலத்திறன் குறைபாடுள்ளதாகக் காணப்படும் ஒரு நபருக்காக, ஏதேனும் முடிவெடுக்கும் அல்லது செயலைச் செய்யும் யாரேனும் ஒருவர் இந்த ஐந்து நெறிகளைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும்.



நெறி 1: ஒரு நபருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளது என்று நிரூபிக்கப்படாத நிலையில் அவருக்கு மனநலத்திறன் உள்ளது என அனுமானிக்கப்படவேண்டும்.

நெறி 2: ஒரு நபருக்கு ஒரு முடிவைச் செய்ய நடைமுறைக்கேற்ற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு அவை தோல்வியில் முடிந்தாலன்றி ஒரு முடிவைச் செய்ய இயலாதவராக அவரை நடத்தக்கூடாது.

நெறி 3: ஒரு நபர் விவேகமற்ற ஒரு முடிவைச் செய்கிறார் என்பதற்காக மட்டுமே ஒரு முடிவைச் செய்யும் ஆற்றல் அவருக்கு இல்லை என்றவாறு அவரை நடத்தக்கூடாது.

நெறி 4: இந்த சட்டத்தின் கீழ் மனநலத்திறன் குறைபாடுள்ளவருக்காக அல்லது அவரது தனக்குத் செய்யப்படும் ஒரு செயல் அல்லது எடுக்கப்படும் ஒரு முடிவு அவரது மிகச்சிறந்த நலனுக்காக செய்யப்படவேண்டும் அல்லது எடுக்கப்படவேண்டும்.

நெறி 5: ஒரு செயல் செய்யப்படுவதற்கு முன் அல்லது ஒரு முடிவு எடுக்கப்படுவதற்கு முன் அச்செயல் அல்லது முடிவின் நோக்கம் அந்நபருக்குள்ள உரிமைகளின் மீதும், செயல் சுதந்தரத்தின் மீதும் குறைந்த கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையில் நல்ல பயனுள்ள முறையில் செய்யப்படக்கூடுமா என்பதைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

### C3. நான் இந்த ஐந்து சட்டப்பூர்வ நெறிகளை எவ்வாறு பயன்படுத்துவது?

இச்சட்டப்பூர்வ நெறிகள் ஒரு தனி நபருக்கு முடிவெடுக்கும் செய்முறையில் முடிந்தவரை பங்கெடுக்க உதவுவதோடு அவ்வாறு செய்ய அவருக்குத் திறன் குறையும் போது அவருக்குப் பாதுகாப்பும் அளிக்கின்றன.

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு மனிதரின் சார்பாக முடிவுகள் எடுக்கும்போதோ, செயல்படும்போதோ ஒவ்வொரு வழக்கிலும் ஏற்புடைய நடவடிக்கை அல்லது முடிவு எடுக்கப்படுவதை உறுதி செய்ய இந்நெறிகளை மனநலத்திறன் சட்டத்திலுள்ள விதிகளுடன் இணைத்து வாசிக்கவேண்டும்.

## நெறி 1: திறன் இருப்பதான முன் அனுமானம்

முடிவெடுக்கவேண்டிய சமயத்தில், ஒரு மனிதருக்கு அந்த முடிவை எடுக்கக்கூடிய திறன் இல்லை என்று ஆதாரம் இருந்தாலன்றி அவருக்குச் சுயமாக முடிவெடுக்கும் திறன் உள்ளது என்று அனுமானிக்கப்படவேண்டும்.

ஒரு மனிதரின் தோற்றம், வயது, நிலை அல்லது நடத்தையை அடிப்படையாகக் கொண்டு, அவரின் மனநலத்திறன் குறைப்பாட்டை மதிப்பிடக்கூடாது. ஆகையால், மக்களுக்குச் சுய முடிவுகள் எடுக்க இயலும் சமயங்களில் அவ்வாறு செய்ய அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

### சாந்தியின் கதை

விவாகரத்தான 66 வயது நிரம்பிய சாந்தி சாந்து, தாழ்வான மின் தூக்கியற்ற அறை-வீடொன்றில், தனியாக வசிக்கிறார். ஆறு மாதங்களுக்கு முன்பு, அவருடைய பிள்ளைகள் சாலை விபத்தொன்றில் துயரமாக மரணம் அடைந்தனர்.

சாந்தி சமூகத்தில் துடிப்புடன் செயல்பட்டு வந்தவர். அவர் பேட்டை நடவடிக்கைகளில் துடிப்புடன் பங்கு கொள்வதோடு, வசிப்போர் குழு நடவடிக்கைகளில் தொண்டராய் இருந்து வந்துள்ளார். விபத்து நடந்ததிலிருந்து அவர் யாரிடமும் பேசுவதில்லை.

அந்த அறை-வீட்டுக் கட்டடத்தின் செயற்குழு, சுகாதாரச் சொற்பொழிவு மற்றும் இலவச உடல் நலப் பரிசோதனை ஆகிய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்கிறது. நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதில் பங்காற்றும் திறன் சாந்திக்கு இல்லை என்று குழு கருதியதால், சாந்தியை விலக்கிவைக்க சிந்திக்கிறது.

**சாந்தி தனியாக வசிப்பதாலும், யாரிடமும் பேசாமலிருப்பதாலும் அவருக்கு மனநலத்திறன் குறைபாடுளது என்று குழு அனுமானிக்கக்கூடாது. ஒரு நபருக்கு திறன் குறைபாடுள்ளது என்று நிரூபிக்கப்பட்டாலன்றி மனநலத்திறன் இருப்பதாக அனுமானிக்கப்படுகிறது. சாந்திக்கு அழைப்பு விடுப்பதை குழு எண்ணிப்பார்க்க வேண்டும். ஈடுபாடு காட்டுவதா இல்லையா என்பது சாந்தியின் விருப்பம்.**

## நெறி 2: நடைமுறைக்கு ஏற்ற எல்லா உதவிகளையும் வழங்குவது

ஒரு குறிப்பிட்ட முடிவைச் செய்ய சிரமப்படக்கூடிய ஒரு மனிதருக்குப் பராமரிப்பு அல்லது சிகிச்சை வழங்கும் பராமரிப்பாளர்கள், குடும்ப உறுப்பினர்கள், அதிகாரம் பெறுநர்கள், துணை அதிகாரம் பெறுநர்கள் மற்றும் தொழில் முறை ஊழியர்கள் ஆகியோர் அம்மனிதர் தன் சொந்த முடிவைச் செய்ய உதவும் வகையில் நடைமுறைக்கேற்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அவர்கள் ஆதரிக்கும் மனிதருக்கு ஒரு முடிவைச் செய்ய உதவும்போது அம்மனிதரின் மீது நெருக்குதலைப் பயன்படுத்தவோ அல்லது சொந்த கருத்துகளைப் புகுத்தவோ கூடாது. அம்மனிதர் பெறக்கூடிய ஆதரவின் தன்மை, அவர் செய்ய வேண்டிய முடிவின் தன்மையையும், சூழ்நிலைகளையும் சார்ந்திருக்கிறது.



ஒரு மனிதர் உரையாடுவதற்குச் சிரமத்தை எதிர்கொள்கிறார் என்ற எளிய காரணத்திற்காக ஒரு தனி நபர் அம்மனிதரின் சார்பாக ஒரு முடிவைச் செய்யக்கூடாது. அதற்கு மாறாக, அத்தனி நபர், பெரிய எழுத்து வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்கள் மூலம் தகவல் கொடுத்தும், சைகை மொழி, பிரெயில் (Braille) போன்ற வெவ்வேறு தொடர்புகொள்ளும் முறைகளைப் பயன்படுத்தியும் ஆதரவு வழங்க வேண்டும்.

### டிம் அவர்களின் கதை

பல போலீஸ் அதிகாரிகள், டிம் என்கிற ஒரு நடுத்தர வயதுள்ள ஆடவர், தீவு விரைவுச்சாலை மேம்பாலத்தின் அடியில் குடியிருப்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். அவர் மிகவும் அழுக்காக இருக்கிறார். அவரது காலில் தொற்றி பரவியது போன்றும் ஒரு பெரிய வெட்டு உள்ளது. அவர்கள் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

மருத்துவமனை ஊழியர்கள், டிம்மிடம் அவரது சொந்த விவரங்களையும், தொடர்பு கொள்ளக்கூடிய உறவினர்களைப் பற்றியும் விசாரிக்கின்றனர். அவர் உரையாடுவதற்கு உதவியாக, இந்தக் கேள்விகள் பல மொழிகளில் கேட்கப்படுகின்றன. அவர் மௌனமாக இருக்கிறார். அவருடைய காயத்தைப் பரிசோதிக்க விரும்பும் மருத்துவருடன் ஒத்துழைக்க மறுக்கிறார்.

டிம்மின் காயத்திற்குச் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால், அவர் தன் காலை இழக்க நேரிடும் என்று மருத்துவர் கூறினார். நிலைமையை அவருக்கு விளக்குவதற்கு அந்த ஆடவரின் கால் மீது இரம்பம் கொண்டு அறுப்பதைப் போன்ற சைகையைச் செய்கிறார். அதன் பிறகு அவர் கூடுதல் கவனம் செலுத்துவதைப் போன்று தோன்றுகிறது. அவர் தலையை ஆட்டிக்கொண்டே தன் வாயையும், காதுகளையும் சுட்டிக்காட்டுகிறார்.

டிம் காது கேளாத ஊமையாக இருக்கலாம் என்று ஒரு தாதி உணர்கிறார். ஆதலால், ஒரு தாளையும், பேனாவையும் அவருக்குக் கொடுத்து, சைகை மொழிபெயர்ப்பு தெரிந்த ஒருவரையும் வரவழைக்கிறார். அவர் சமாதானம் அடைந்து, மருத்துவமனை ஊழியருடன் எழுத்து வழி தொடர்புகொள்ளத் தொடங்குகிறார்.

**டிம்மால் வாய்மொழியாக உரையாட இயலாமல் இருந்திருக்கலாம். ஆனால், அதுவே அவருடைய சிகிச்சையைப் பற்றிய முடிவை அவரால் செய்ய முடியாது என்று அர்த்தமாகாது. அவர் ஒரு முடிவைச் செய்யவும், அந்த முடிவை எடுத்துச்சொல்லவும் தேவைப்படுகிற எல்லா நடைமுறக்கேற்ற உதவிகளையும் கொடுப்பதற்கு முன், அவருக்குச் சிகிச்சையைப் பற்றி முடிவெடுக்கும் மனநலத்திறன் இல்லை என்று மருத்துவக் குழு முடிவெடுக்கக் கூடாது.**

**அவசர சூழ்நிலைகளில், உதாரணத்திற்கு, விபத்தின் காரணமாக கடுமையான காயங்களுடன் இருக்கும் சமயங்களில், ஒருவர் அவரது சொந்த முடிவுகளைச் செயவதை ஆதரிக்கப் பெரும் அளவிலான நடைமுறைக்கேற்ற வழிகளை மேற்கொள்வது சாத்தியாமாகாது. அச்சமயங்களில் என்ன நடக்கிறது, ஏன் நடைமுறைகள் செயல்படுத்தப்படுகின்றன என்று அவருக்கு அறிவிப்பதை மட்டுமே செய்ய முடியும்.**

## நெறி 3: விவேகமற்ற முடிவு

ஒரு மனிதர் செய்யும் முடிவுகள் மற்றவர்களின் கண்ணோட்டத்தில் விவேகமற்ற முடிவுகளாகத் தோன்றினாலும் அவரது சொந்த முடிவுகளைச் செய்வதற்கு அவருக்குச் சுதந்திரம் உண்டு. ஒரு மனிதர் தன் சொந்த முடிவுகளச் செய்வதற்கு செய்யும் உரிமையை இது அங்கீகரிக்கிறது. ஒரு முடிவு விவேகமற்றதாக இருப்பதால்,அம்மனிதர் மனநலத்திறனை இழந்துவிட்டார் என்று அர்த்தமாகாது.

ஆயினும், ஒரு மனிதர் விவேகமற்ற முடிவைச் செய்வதற்கும், (தீர்மானிக்கும் மனிதர் செய்யக்கூடிய முடிவு), ஒரு மனிதர் முடிவைச் செய்யத் தேவைப்படும் தகவலை அம்மனிதர் புரிந்துகொள்ள, நினைவு கூற அல்லது பயன்படுத்த மனநலத்திறன் இழந்த நிலையில் செய்யப்படும் முடிவிற்கும் வேறுபாடுண்டு.

ஒரு மனிதரின் வழக்கமான நடத்தையைக் கருத்தில் கொண்டு, அவர் எடுக்கும் பல முடிவுகள் வழக்கத்திற்கு மாறாக இருந்தாலோ அல்லது மற்றவர்கள் அவரை எளிதில் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அல்லது அவருக்குத் தீங்கு விளைவிக்ககூடிய முடிவுகளைச் செய்தாலோ, அம்மனிதரின் மனநலத்திறனைப் பற்றிய கூடுதல் சோதனைகள் நடத்தப்பட வேண்டும்.

### ஆ ஹுவாட் அவர்களின் கதை

ஆ ஹுவாட்டிற்கு 73 வயது. அவர் மனைவியை இழந்து தனியாக வசித்து வருகிறார். கடந்த வாரம், போல் என்ற ஜன்னல் பொருத்தும் வியாபாரி ஒருவர் ஹுவாட்டை அவரது வீட்டில் சந்தித்தார். கழிவறை ஜன்னல்கள் துருப்பிடித்திருப்பதால், அவற்றை மாற்ற வேண்டும் என்று போல் ஆ ஹுவாட்டை நம்பவைக்கிறார். மறு தினம் போல், மீண்டும் ஆ ஹுவாட்டின் வீட்டிற்குச் சென்று ஆ ஹுவாட் தன் படுக்கை அறையின் ஜன்னல்களையும் மாற்ற வேண்டும் என்று அவருக்கு ஆலோசனை கூறுகிறார். போல் ஆ ஹுவாட்டிடம் $500 விலை குறிப்பிடுகிறார்.

ஆ ஹுவாட்டின் மகன் ஆ செங், தன் தந்தையின் மீது கவலை கொள்கிறார். வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பதால் ஆ ஹுவாட் தன் நிதி விவகாரங்களில் கவனமாக இருப்பது வழக்கம்.

போல் மூன்றாவது முறையாக திரும்பி வருகிறார். அப்பொழுது, ஆ ஹுவாட்டும் தன் வீட்டில் இருக்கும் மற்ற ஜன்னல்கள் அனைத்தையும் $1500க்கு மாற்ற ஒத்துக்கொள்கிறார். ஜன்னல்களை முன்கூட்டியே பரிசோதித்த ஆ செங், ஜன்னல்கள் நல்ல நிலையில் இருந்ததையும், அவற்றை மாற்ற வேண்டிய அவசியம் இல்லாததையும் கவனித்தார். தன் தந்தையை போல் பயன்படுத்திக்கொள்கிறார் என்று ஆ செங் நம்புகிறார். மேலும் இதே போன்ற பொருள் வாங்கும் தீர்மானங்களைச் செய்யக்கூடிய ஆற்றல் ஆ ஹுவாட்டிற்கு உள்ளதா என்றும் அவர் சிந்தித்துப் பார்க்கிறார்.

நல்ல ஒரு விலை கிடைப்பதால், எல்லா ஜன்னல்களையும் ஒரே சமயத்தில் மாற்றத் தான் விரும்புவதாக, ஆ ஹுவாட் விளக்குகிறார். ஓரிரு வருடங்களில் எல்லா ஜன்னல்களையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும் என்று அவர் நம்புகிறார்.

**தன் தந்தை ஆ ஹுவாட்டிற்கு 73 வயதாவதாலும், அவர் வீட்டின் எல்லா ஜன்னல்களையும் மாற்ற முடிவெடுத்திருப்பதாலும் அவருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளது என்று ஆ செங் அனுமானிக்கக்கூடாது. ஆ ஹுவாட்டின் வழக்கமான நடத்தையில் தொடர்ந்து மாற்ற்றம் ஏற்பட்டு, அது கவலைக்கு உரியதாக இருந்தால், அது தொடர்பாக ஆ செங் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும்.**



## நெறி 4: மிகச்சிறந்த நலன்கள்

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு மனிதரின் சார்பாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயல் அல்லது முடிவு, அவரது மிகச்சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டு செய்யப்பட வேண்டும். செய்யப்படும் முடிவு, அம்மனிதரின் மிகச் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டுள்ளதா என்பது வழக்கின் சூழ்நிலைகளைச் சர்ந்திருக்கும்

### மிகச் சிறந்த நலன்கள் - சரிபார்ப்புப் பட்டியல்

| சரிபார்ப்புப் பட்டியலில் உள்ள வகைகள் | விண்ணப்பத்தின் வரையறை |
|---|---|
| 1. கேள்வியில் இருக்கும் முடிவைச் செய்ய எதிர்காலத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் அந்நபர் தனது மனநலத்திறனை மீண்டும் பெறுவாரா, அவ்வாறு இருப்பின் அது எப்போது நிகழும். | கட்டாயம் பரிசீலிக்கப்பட வேண்டும் |
| 2. அந்நபரின் கடந்த மற்றும் தற்போதைய ஆசைகள், குறிப்பாக அந்நபருக்கு மனநலத்திறன் இருந்த சமயத்தில் அவை குறித்துவைக்கப்படிருந்தால். | நியாயமாகக் கண்டறியப்பட முடிந்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். |
| 3. அந்நபர் மனநலத்திறனுடன் இருந்திருந்தால், அவருடைய முடிவைப் பாதிக்கக்கூடிய நம்பிக்கைகளும், பண்புகளும், உதாரணத்திற்கு, அவருடைய கலாச்சார பின்னணி, சமய நம்பிக்கைகள், மற்றும் கடந்தகால நடத்தை அல்லது பழக்க வழக்கங்கள். | நியாயமாகக் கண்டறியப்பட முடிந்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். |
| 4. அந்நபர் மனநலத்திறனுடன் இருந்திருந்தால், அவர் பரிசீலித்திருக்கக்கூடிய வேறு எவையேனும் காரணிகள். | நியாயமாகக் கண்டறியப்பட முடிந்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். |
| 5. கேள்வியில் இருக்கும் விவகாரத்தின் மீது அல்லது அது போன்ற விவகாரங்களின் மீது ஆலோசனை பெறப்படக்கூடியவர் என்று அந்நபர் பெயர் குறிப்பிட்டிருக்கும் யாரேனும் ஒருவரின் கருத்துகள். | நடைமுறைக்கேற்றவாறும், பொருத்தமாயும் இருந்தால் கலந்து பேச வேண்டும். |
| 6. அந்நபரைப் பராமரிக்க நியமிக்கப்பட்டிருக்கும் அல்லது அவரது நலனில் அக்கறை கொண்டிருக்கும் யாரேனும் ஒருவரின் கருத்துகள். | நடைமுறைக்கேற்றவாறும், பொருத்தமாயும் இருந்தால் கலந்து பேச வேண்டும். |
| 7. அந்நபர் வழங்கிய ஏதேனும் ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) கீழ் உள்ள யாரேனும் ஒரு அதிகாரம் பெறுநரின் கருத்துகள். | நடைமுறைக்கேற்றவாறும், பொருத்தமாயும் இருந்தால் கலந்து பேச வேண்டும். |
| 8. நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட யாரேனும் ஒரு துணை அதிகாரம் பெறுநரின் கருத்துகள் | நடைமுறைக்கேற்றவாறும், பொருத்தமாயும் இருந்தால் கலந்து பேச வேண்டும். |

## ரோன் அவர்களின் கதை

கெவின் கூவிற்கும், அவரது மனைவி .ஸாலி லீவிற்கும் மூன்று பிள்ளைகள் அவர்களது மூத்த பிள்ளை, 23 வயதான ரோன் அறிவாற்றல் ஊனமுற்றவர். அவர் அறநிலையம் ஒன்றால் நடத்தப்படும் புகலிடப்பட்டறை ஒன்றில் வேலை செய்து கொண்டிருக்கிறார்.

ரோன் போன்றோர் யாரையும் சுதந்திரமாக வாழ்வதற்கு அடிப்படை வாழ்க்கைத் திறன்களைக் கற்றுப் பெறுவதற்குத் தற்காலிகத் தங்குமிட வசதி அளிக்கும் திட்டமும் அறநிலையத்திடம் உள்ளது. ஓரளவு ஆதரவுடன் பொதுப் போக்குவரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் பற்றியும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்த வாழ்க்கைத் திறன்கள் பொது வேலை வாய்ப்புகளுக்கு அவர்களை மேலும் தகுதியுடையவர்களாக்க உதவுகிறது.

தங்குமிட வசதி திட்டத்தில் ஓர் இடம் கிடைத்திருப்பதால் அறநிலையத்தின் சமூக ஊழியர்கள் ரோன் அந்த வாய்ப்பை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கின்றனர்.

ரோன் மேலும் சுதந்திரமாக இருக்க விரும்புவார் என்று கெவின் மற்றும் ஸாலி இருவருக்கும் தெரியும். ஆயினும், ரோன் அந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்டால், இனி அவர்களால் ரோனைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள முடியாமல் போவதோடு ரோன் அவர்களுடன் குறைந்த நேரமே செலவிடுவார் என்று அவர்கள் கவலைப்படுகின்றனர்.

**தங்குமிட வசதி திட்டத்தைப்பற்றி ரோனிற்கு முடிவு செய்யும் மனநலத்திறன் இருந்தால் கெவின், ஸாலி இருவரும் அவருக்காக முடிவைச் செய்யக்கூடாது இந்த முடிவைச் செய்வதற்கு ரோனிற்குத் திறன் குறைபாடிருந்தால், கெவின், ஸாலி இருவரும் ரோனின் மிகச் சிறந்த நலனை முன்னிட்டுச் செயல்பட வேண்டுமே தவிர தங்களின் நலனுக்காக அல்ல.**






## நெறி 5: குறைவான கட்டுப்பாடுகள்

மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களுக்காக செயல்படும்போது அல்லது அந்தச் செயலோ அல்லது முடிவோ குறைபாடுள்ளவரின் செயல்படும் உரிமை மற்றும் சுதந்தரத்திற்குக் குறைவான கட்டுப்பாடுகளை விதிப்பவையாக இருக்க வேண்டும்.

குறைவான கட்டுப்பாடுகளைக்கொண்ட விருப்பத்தேர்வே பெரும்பாலும் அம்மனிதரின் மிகச்சிறந்த நலனுக்குள்ளதாக இருக்கும்.

சில சமயங்களில், எந்த ஒரு செயலையோ, முடிவையோ செய்யாமலே இருப்பதும் அதில் அடங்கும். செய்யப்படும் எல்லாச் செயல்களும் அல்லது முடிவுகளும் அல்லது எந்தச் செயலும் செய்யக்கூடாது என்று எடுக்கப்படும் முடிவும் அம்மனிதரின் மிகச் சிறந்த நலனுக்காக எடுக்கப்பட வேண்டும்.

## ஆ மெய் அவர்களின் கதை

ஆ மெய் என்பவர் டிமென்சியா எனும் நினைவாற்றல் இழப்பு நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார். தன் 80-வயது தாயார் திருவாட்டி குவாங் சியு மோய்யுடன் வாழ்ந்து வருகிறார்.

ஆ மெய் வேலைக்குச் செல்லும் சமயங்களில் தன் தாயார் தன்னையே காயப்படுத்திக்கொள்ளாமல் இருக்கவும், அலைந்து திரியாமல் இருக்கவும், அவரை ஓர் அறையில் பூட்டி வைப்பார். அறையில் உணவும், தண்ணீரும் வைத்துவிடுவார். திருவாட்டி குவாங் அணையாடை (டைபர்ஸ்) அணிந்திருப்பார்.

மாலையில் ஆ மெய் வீடு திரும்பியதும், தன் தாயைக் குளிப்பட்டி உணவு ஊட்டுவார். ஆ மெய் தாயாரின் பாதுகாப்பின் மீது அக்கறை கொண்டு செயல்பட்டாலும், ஒரு பாசமிகு மகளாக இருந்தாலும் இவ்வகையான பராமரிப்பு, குறைவான கட்டுப்பாடுகளைக்கொண்ட தேர்வு அல்ல.

நினைவாற்றல் இழப்பு நோயால் பாதிக்கப்பட்டிருப்போருக்கான பகல் நேரப் பராமரிப்பு நிலையத்தில் திருவாட்டி குவாங்கைச் சேர்ப்பது போன்ற பொருத்தமான மற்றப் பராமரிப்பு ஏற்பாடுகளை அவர் செய்ய வேண்டும்.

**ஒன்றுக்கும் மேற்பட்ட விருப்பத்தேர்வுகள் உண்டெனில் அவை ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டும். எடுக்கப்படும் முடிவு மிகச் சிறந்த நலன் மற்றும் குறைவான கட்டுப்பாடுகளைக்கொண்ட தேர்வு ஆகிய இரு நெறிகளால் தீர்மானிக்கப்பட வேண்டும்.**

# பகுதி D

## மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களை இந்த மனநலத்திறன் சட்டம் எவ்வாறு பாதுகாக்கிறது?

மனநலத்திறன் குறைபாடுள்ளவர்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பிரிவைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலான சமயங்களில் தாங்கள் துன்புறுத்தப்படுவதைக் கூட இவர்கள் அறிந்திருப்பதில்லை. உடல், பால், மற்றும் உள்ளம் சார்ந்த துன்புறுத்தல்களை உள்ளடக்கும் ஒரு புதிய துன்புறுத்தல் குற்றவியல் குற்றத்தை மனநலத்திறன் சட்டம் (சட்டம்) உருவாக்கியுள்ளது.

### D1. துன்புறுத்தல் நடப்பதாக எவரேனும் சந்தேகப்பட்டால் என்ன நிகழும்?

யாரிடம் தெரிவிக்கவேண்டும்?

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவர் சரிவரப் பராமரிக்கப்படவில்லை என்றும், அவருக்குக் கவனிப்போ அல்லது பாதுகாப்போ தேவைப்படுகிறது என்றும் எவரேனும் அறிந்திருந்தால், சந்த்கேகப்பட்டால், அல்லது நம்பினால் பொதுக் காப்பாளரிடம் மற்றும் தகுந்த அமைப்புகளிடம் புகார் செய்யலாம்.

அந்நபருக்கு எதிராக ஒரு குற்றம் புரியப்பட்டிருக்கிறது என்று சந்தேகப்பட்டால் நல்ல காரணம் இருந்தால், புகார் போலீசிடம் செய்யப்பட வேண்டும்.



| துன்புறுத்தல் வகை | யாரை உதவிக்கு தொடர்பு கொள்வது |
|---|---|
| உடல் சார்ந்த | • போலீஸ்<br>• குடும்ப சேவை நிலையம்<br>• பொதுக் காப்பாளர் நிலையம் |
| பாலியல் சார்ந்த | • போலீஸ்<br>• பொதுக் காப்பாளர் அலுவலகம் |
| நிதி சார்ந்த | • போலீஸ்<br>• குடும்ப சேவை நிலையம்<br>• பெற்றோர் பராமரிப்பு பஞ்சாயத்து (பெற்றோர்க்கு நிதி உதவி வழங்கி ஆதரிக்கத் தவறியதற்கு)<br>• பொதுக் காப்பாளர் அலுவலகம்(ஒரு அதிகாரம் பெறுநர் அல்லது துணை அதிகாரம் பெறுநர் சம்மந்தப்பட்டிருந்தால்) |
| உளவியல் சார்ந்த | • போலீஸ்<br>• குடும்ப சேவை நிலையம்<br>• பொதுக் காப்பாளர் நிலையம் |
| புறக்கணிப்பு மற்றும் அசட்டை செய்யும் செயல்கள் | • போலீஸ்<br>• குடும்ப சேவை நிலையம்<br>• பொதுக் காப்பாளர் நிலையம் |

### D2. காட்டிக்கொடுப்போர் பாதுகாப்பு

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு நபருக்குப் பராமரிப்போ அல்லது பாதுகாப்போ தேவைப்படுகிறது என்ற தங்களின் சந்தேகத்தைப் பொதுக் காப்பாளரின் அலவலகத்தில் தெரிவிக்கும் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் அலர்களது தொழில்முறை ஒழுங்கியல் தொகுப்பையோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட தொழில்முறை தொகுப்பையோ மீறியவர்களாக மாட்டார்கள்.

மனநலத்திறன் குறைபாடுள்ளவர்கள் துன்புறுத்தப்படுவதாக எழும் சந்தேகத்தைக் குறித்து பொதுக் காப்பாளரிடம் புகார் செய்யும் காட்டிக்கொடுப்போர்க்கு மனநலத்திறன் சட்டம் காட்டிக்கொடுப்போர் பாதுகாப்பை வழங்குகிறது. காட்டிக்கொடுப்போரின் அடையாளம் நீதிமன்ற நடவடிக்கைகளில் வெளியிடப்படாமல் இருக்கலாம். நீதிமன்ற நடவடிக்கைகளில் காட்டிக்கொடுப்போரின் அடையாளத்தை வெளியிடுமாறு எவர் ஒருவரும் நிர்பந்தப்படுத்த முடியாது.

பொதுக் காப்பாளரிடம் நல்லெண்ணத்தோடு அறிவிப்புச் செய்யும் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களுக்குச் சட்டம் பாதுகாப்பு வழங்குகிறது. இவ்வாறு அறிவுப்புகள் செய்ததற்கு அவர் எந்த ஒரு உரிமையியல் சட்ட நடவடிக்கையையும் எதிர்நோக்கமாட்டார்.

# பகுதி E

## மனநலத்திறன் மதிப்பீட்டைப் பற்றி நான் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்?

### E1. "மனநலத்திறன் குறைபாடு" என்பதன் பொருள் என்ன?

மனநலத்திறன் குறைபாடு என்பது மனம் அல்லது மூளையின் செயல்பாட்டில் ஏற்படும் ஒரு சேதத்தால் அல்லது தடையால் விரைவில் நிகழக்கூடிய விவகாரத்தின் தொடர்பில் ஒரு முடிவைச் செய்ய இயலாத நிலையைக் குறிக்கிறது.

ஒரு செயல் செய்யப்பட வேண்டிய சமயத்தில் ஒரு திட்டவட்டமான முடிவை எடுப்பதன் தொடர்பாக ஒரு நபரால் பின்வருவனவற்றில் ஒன்றையோ அல்லது அதற்கும் மேற்பட்டவற்றையோ செய்ய இயலவில்லை என்றால், அந்நபரால் ஒரு முடிவைச் செய்ய முடியவில்லை என்று பொருள்படும்.

- தகவலைப் புரிந்து கொள்வது,
- தகவலை ஞாபகம் வைத்துக்கொள்வது,
- தகவலை எடை போடுவது, மற்றும்
- முடிவைத் தெரிவிப்பது.

"மனநலத்திறன் குறைபாடு" என்பதன் வரையறை மனநலத்திறனுக்கான இரண்டு-கட்ட சோதனையை வழங்குகிறது.

#### 1-ம் கட்டம்

அந்நபர் மனம் அல்லது மூளையின் செயல்பாட்டில் ஏற்படும் ஒரு சேதத்தால் அல்லது தடையால் அவதிப்படுகிறாரா?

#### 2-ம் கட்டம்

ஆம் என்றால் அந்நபர் ஒரு முடிவைச் செய்ய வேண்டிய சமயத்தில் செய்ய முடியாமல் போவதற்கு இந்தச் சேதம் அல்லது தடை தான் காரணமா?



### E2. ஒருவருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளதா இல்லையா என்று முடிவு செய்பவர் யார்?

ஒரு நபரின் மனநலத்திறனை மதிப்பிடுவதில் வெவ்வேறு தனி நபர்கள் வெவ்வேறு முடிவுகளுக்காக ஈடுபடக்கூடும். மதிப்பீடு செய்பவர் பெரும்பாலும் அந்நபர் முடிவைச் செய்ய வேண்டிய நேரத்தில் அவருடன் நேரடித்தொடர்பில் உள்ள ஒரு நபராக இருப்பார்.

#### முறைசாரா மதிப்பீடு

இது போன்ற மதிப்பீடுகள் பெரும்பாலான நாளுக்கு நாள் வாழ்க்கையில் எடுக்கப்படும் முடிவுகளுக்குப் பொருத்தமாக இருக்கும்., உதாரணமாக, அந்நபர் தனியாக வெளியில் செல்லலாமா போன்ற முடிவு. மதிப்பீடு செய்பவர் அநேகமாக அந்நபரின் பராமரிப்பளராக இருப்பார். மதிப்பீடு செய்பவர் சட்டபூர்வமான நெறிகளை அவசியம் பயன்படுத்தி அந்நபர் தன் சொந்த முடிவைச் செய்ய எல்லா நடைமுறைக்கேற்ற உதவியையும் வழங்க வேண்டும் முடிவை எடுக்க அந்நபருக்கு மனநலத்திறன் குறைபாடிருந்தால், அவரது சார்பாக பராமரிப்பளர் முடிவுகளை எடுப்பார். மனநலத்திறன் மதிப்பீடுகளைச் செய்ய விசேடப் பயிற்சி அளிக்கப்படாத ஒரு தனி நபர் முறைசாரா மதிப்பீடுகளைச் செய்வார்.

#### முறையான மதிப்பீடு

ஒரு பதிவு செய்யப்பட்ட பொது மருத்துவர் அல்லது மருத்துவ நிபுணர் இந்த மதிப்பீட்டைச் செய்யலாம் முரண்பாடான பலனைத் தவர்ப்பதற்கு, மதிப்படைச் செய்பவருக்கும் மதிப்பிடப்படுபவருக்கும் அல்லது அந்நபருக்கு முறையான மதிப்பீட்டை நாடும் தனி நபருக்கும் உறவுமுறை இருக்கக்கூடாது.

அந்நபர் செய்ய வேண்டிய முடிவு முக்கியமான முடிவாக இருந்து அந்நபரின் மனநலத்திறனில் அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால் ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) -யின் அறங்காவலரோ அல்லது வழக்கறிஞர் போன்ற பட்டத்தொழிலாரோ ஒரு முறையான மதிப்பீட்டை நாடலாம்.

இதுபோன்ற முடிவுகளின் உதாரணங்கள் வருமாறு:

- வீடு மாறுவது,
- சொத்துகளை விற்பது, அல்லது
- சொத்துகளை இன்னொரு தனி நபருக்கோ அல்லது அமைப்புக்கோ மாற்றுவது.

அதிகாரம் அளிப்பவரின் சொத்து சம்மந்தமான விவகாரத்தில் ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) யின் அறங்காவலரோடு தொடர்புகொள்ளும் ஒரு தனி நபர் அல்லது வங்கி போன்ற ஓர் அமைப்பு, அவ்விவகாரத்தின் தொடர்பாக அந்நபருக்குள்ள மனநலத்திறன் குறைபாடு நிரந்தரமானது என்ற பதுவு செய்யப்பட்ட மருத்துவரின் அறிக்கையைப் பார்வைக்கு வைக்குமாறு அறங்காவலரை அவசியப்படுத்தலாம். இந்த அறிக்கையைப் பெற அதிகாரம் பெறுநர் முதலில் அதிகாரம் அளிப்பவரின் முறையான மனநலத்திறன் மதிப்பீட்டைப் பெற வேண்டும்.

## E3. ஒருவரின் மனநலத்திறன் எப்போது மாறக்கூடும்?

ஒரு நபரின் மனநலத்திறன் நேரத்திற்கு நேரம் மாறுகிறது. (உதாரணமாக, அவரது நிலைமை நல்ல நிலையிலிருந்து மோசமான நிலைக்கும், மோசமான நிலையிலிருந்து நல்ல நிலைக்குமாக மாறுகிறது) - அது நிலையற்றிருக்கிறது.

அந்நபருக்கு மனநலத்திறன் இருக்கும் சமயங்களில் முடிவுகள் செய்ய அவருக்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும். (அதாவது, அவரது நிலை நன்றாக இருக்கும் போது).

ஒரு குறுகிய காலத்திற்கு மட்டும் மனநலத்திறன் இருக்கும் நபர்கள் அவர்களுக்கு மனநலத்திறன் இருக்கும் அந்த காலப்பகுதியில் முடிவுகள் செய்யலாம்.

| வகை | உதாரணங்கள் |
|---|---|
| மாறுபடும் மனநலத்திறன் குறைபாடு | கீழ்க்கண்டவற்றால் அவதியுறும் ஒரு நபருக்கு:<br>• டிமென்சியா என்னும் நினைவாற்றல் இழப்பு நோயின் ஆரம்ப கட்டம்<br>• மன அழுத்த நோய்<br>• ஸ்கீஸோஃப்ரெனியா என்னும் மனநோய் |

### டானியால் அவர்களின் கதை

72 வயதுடைய டானியால் ஆரம்ப கட்ட அல்சய்மர் என்னும் மூளை நோயால் அவதியுறுகிறார். அவரது மனநலத்திறன் மாறிக்கொண்டே இருக்கும். அவர் மனநலத்திறனோடு இருக்கும் போது பண விவகாரங்களைக் கருத்தோடு கையாளுவார். மற்ற நேரங்களில் ஞாபக மறதியால் அதே பொருள்கள் மற்றும் சேவைகளுக்குப் பல தடவை பணம் செலுத்துவார் அல்லது ரொக்கப் பணத்தை அறிமுகமில்லாதவர்களுக்குக் கொடுத்து விடுவார். அவர் செய்ததை உணரும் போது அவர் மீது அவருக்கே வருத்தம் உண்டாகும்.

ஒரு நாளில், மற்ற நேரங்களைவிட காலை நேரத்தில் தான் டானியாலின் மனநலத்திறன் நன்றாக இருப்பதை அவரது கதுடும்பத்தினர் கவனித்துள்ளனர்.

**அவருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ள நேரங்களில் அவர் அதிகம் செலவு செய்யாதிருக்க, வங்கியிலிருந்து அவர் அன்றாடம் எடுக்கக்கூடிய தொகையின் வரம்பைக் குறைக்க வங்கிக்கு உத்தரவிடுவதைப் பற்றி டானியாலின் குடும்பம் அவரிடம் பேச காலை நேரமே சிறந்ததாக இருக்கும்.**



# பகுதி F

## பராமரிப்பாளர்களுக்கான சரிபார்ப்புப் பட்டியல்

## F1. சரிபார்ப்புப் பட்டியல்

பராமரிப்பு அல்லது சிகிச்சைச் செயல்களைச் செய்யும் ஒரு தனி நபர் கீழுள்ள சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்த வேண்டும். எல்லாத் தொழில்முறை ஊழியர்களும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் குறித்து பதிவுகள் வைத்திருக்க வேண்டும். இந்தப் பழக்கத்தை ஏற்படுத்திகொளவது நல்லது மற்றும் ஒரு சர்ச்சை எழும்போது இது உதவியாக இருக்கும்.

| நிலை 1 - சட்டபூர்வ நெறிகளுக்கு மதிப்பு கொடுங்கள். | செயல்பட-டுத்து |
|---|---|
| 1. எந்தவொருநபரைக்கையாளும்போதும்,அவருக்கு,ஒருமுடிவைச் செய்யும் திறன் இல்லை என்று நிரூபிக்கப்பட்டிருந்தாலன்றி அவருக்குச் சுயமாக முடிவெடுக்கும் திறன் உள்ளது என்று அனுமானிக்கப்பட வேண்டும். | ✓ |
| 2. ஒரு நபர் தன் சொந்த முடிவைச் செய்ய உதவும் வகையில் நடைமுறக்கேற்ற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தாலன்றி அவரைச் சுயமாக முடிவெடுக்க இயலாதவரைப் போல் நடத்தக்கூடாது. | ✓ |
| 3. ஒரு நபர், ஒரு விவேகமற்ற முடிவை எடுப்பதை வைத்து அவரை மனநலத்திறன் குறைபாடுள்ளவரைப் போல் நடத்தக் கூடாது. | ✓ |
| 4. மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு நபரின் சார்பாகச் செய்யப்படும் செயல் அல்லது முடிவு, அவரது மிகச்சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டு செய்யப்படவேண்டும். | ✓ |
| 5. மனநலத்திறன் குறைபாடுள்ளவருக்காக செயல்படும் முன்போ அல்லது முடிவெடுக்கும் முன்போ, அந்தச் செயலோ அல்லது முடிவோ எடுப்பதற்கான செயல்நோக்கத்தைப் பயனுள்ள வகையில் அடைய, அந்நபரின் உரிமை மற்றும் சுதந்தரத்திற்குக் குறைவான கட்டுப்படுகளைக்கொண்ட வேறு ஏதேனும் விருப்பத்தேர்வு உண்டா எனப் பரிசீலிக்கப்படவேண்டும். | ✓ |

| நிலை 2 -குறிப்பிட்ட சில காரணிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மிகச் சிறந்த நலன்களைத் தீர்மானிக்காதீர்கள். | செயல்படுத்து |
|---|---|
| முடிவெடுப்பவர் கீழ்க்கொடுக்கப்பட்டவற்றை மட்டுமே அடிப்படையாக வைத்து ஒரு நபரின் மிக்ச் சிறந்த நலன்களை முடிவெடுக்கவோ அல்லது மனநலத்திறனை மதிப்பிடவோ கூடாது:<br>• வயது,<br>• தோற்றம்,<br>• நிலை, மேலும்<br>• நடத்தையின் கூறு. | ✓ |

| நிலை 3 - மனநலதிறனை மதிப்பிடுங்கள் | செயல்படுத்து |
|---|---|
| முடிவெடுப்பவர், இரண்டு-கட்டச் சோதனையைக் கொண்டு அந்நபரின் மனநலத்திறனை மதிப்பிட வேண்டும். | ✓ |

| நிலை 4 -ஈடுபாடு கொள்ளவும் & பங்கெடுக்கவும் ஊக்கமளியுங்கள் | செயல்படுத்து |
|---|---|
| முடிவெடுப்பவர், நடைமுறைக்கேற்றபடி அந்நபரைப் பங்கெடுக்க அனுமதிக்க வேண்டும் மற்றும் ஊக்கமளிக்க வேண்டும் அல்லது அவருக்காக செய்யப்படும் ஏதேனும் செயலிலோ அல்லது அவரைப் பாதிக்கும் ஏதேனும் முடிவிலோ அவர் முடிந்தமட்டும் பங்குபெறும் அவரது ஆற்றலை மேம்படுத்த வேண்டும். | ✓ |

| நிலை 5 - மிகச்சிறந்த நலன்கள் சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்துங்கள். | விண்ணப்பத்தின் வரையறை | செயல்படுத்து |
|---|---|---|
| 1. கேள்வியில் இருக்கும் முடிவைச் செய்ய எதிர்காலத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் அந்நபர் தனது மனநலத்திறனை மீண்டும் பெறுவாரா, அவ்வாறு இருப்பின் அது எப்போது நிகழும். | கட்டாயம் பரிசீலிக்கப்பட வேண்டும் | ✓ |
| 2. அந்நபரின் கடந்த மற்றும் தற்போதைய ஆசைகள், குறிப்பாக அந்நபருக்கு மனநலத்திறன் இருந்த சமயத்தில் அவை குறித்துவைக்கப்படிருந்தால். | நியாயமாக கண்டறியப்பட முடிந்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். | ✓ |
| 3. அந்நபர் மனநலத்திறனுடன் இருந்திருந்தால், அவருடைய முடிவைப் பாதிக்கக்கூடிய நம்பிக்கைகளும், பண்புகளும், உதாரணத்திற்கு, அவருடைய கலாச்சார பின்னணி, சமய நம்பிக்கைகள், மற்றும் கடந்தகால நடத்தை அல்லது பழக்க வழக்கங்கள். | நியாயமாகக் கண்டறியப்பட முடிந்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். | ✓ |
| 4. அந்நபர் மனநலத்திறனுடன் இருந்திருந்தால், அவர் பரிசீலித்திருக்கக்கூடிய வேறு எவையேனும் காரணிகள். | நியாயமாகக் கண்டறியப்பட முடிந்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். | ✓ |
| 5. கேள்வியில் இருக்கும் விவகாரத்தின் மீது அல்லது அது போன்ற விவகாரங்களின் மீது ஆலோசனை பெறப்படக்கூடியவர் என்று அந்நபர் பெயர் குறிப்பிட்டிருக்கும் யாரேனும் ஒருவரின் கருத்துகள். | நடைமுறைக்கேற்றவாறும், பொருத்தமாயும் இருந்தால் கலந்து பேச வேண்டும். | ✓ |
| 6. அந்நபரைப் பராமரிக்க நியமிக்கப்பட்டிருக்கும் அல்லது அவரது நலனில் அக்கறை கொண்டிருக்கும் யாரேனும் ஒருவரின் கருத்துகள். | நடைமுறைக்கேற்றவாறும், பொருத்தமாயும் இருந்தால் கலந்து பேச வேண்டும். | ✓ |
| 7. அந்நபர் வழங்கிய ஏதேனும் ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) கீழ் உள்ள யாரேனும் ஒரு அதிகாரம் பெறுநரின் கருத்துகள். | நடைமுறைக்கேற்றவாறும், பொருத்தமாயும் இருந்தால் கலந்து பேச வேண்டும். | ✓ |
| 8. நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட யாரேனும் ஒரு துணை அதிகாரம் பெறுநரின் கருத்துகள் | நடைமுறைக்கேற்றவாறும், பொருத்தமாயும் இருந்தால் கலந்து பேச வேண்டும். | ✓ |

| நிலை 6 - சிறப்புப் பரிசீலனை — உயிர் வாழ்க்கை சிகிச்சை | செயல்படுத்து |
|---|---|
| உயிர் வாழ்க்கை சிகிச்சை சம்பந்தமான முடிவுகளை மருத்துவரைத் தவிர்த்து வேறு யாரும் எடுக்கக்கூடாது. அதோடு, அந்த மருத்துவருக்கு அந்நபரின் உயிரைப் போக்குவதற்கான தூண்டுதலுணர்ச்சி இருக்கக்கூடாது. | ✓ |

| நிலை 7 - சிறப்புப் பரிசீலனை — பராமரிப்பு அல்லது சிகிச்சைச் செயல்கள் | செயல்படுத்து |
|---|---|
| பராமரிப்பு அல்லது சிகிச்சைச் செயல்களுக்கு மனநலத் திறன் சட்டத்தின் 7-ம் பிரிவின் கீழ் பாதுகாப்பு பெற, தனி நபர் ஒருவர் பின் வரும் நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும்:<br>• அச்செயலை செய்யும் முன், கேள்வியில் இருக்கும் விவகாரத்தின் தொடர்பில் அந்நபருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளதா எனத் தீர்மானிக்க நியாயமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மற்றும்,<br>• அந்நபருக்கு மனநலத்திறன் குறைபாடுள்ளது எனவும் செய்யப்படும் செயல் அந்நபரின் மிகச் சிறந்த நலனை மனதில் கொண்டு செய்யப்படுகின்றது எனவும் நியாயமாக நம்ப வேண்டும். | ✓ |

| நிலை 8 - சிறப்புப் பரிசீலனை — அடக்குமுறை (பராமரிப்பு அல்லது சிகிச்சைச் செயல்கள்) | செயல்படுத்து |
|---|---|
| பராமரிப்பு அல்லது சிகிச்சைச் செயல்களில், அடக்குமுறைச் செயல்கள் பரிசீலிக்கப்படும் போது, தனிநபர் ஒருவர், நிலை 7-ல் உள்ள நிபந்தனைகளுக்குக் கூடுதலாக:<br>• அந்நபருக்கு தீங்கு வராமல் இருப்பதற்காகவே அடக்குமுறைச் செயல்கள் அவசியம் என நியாயமாக நம்ப வேண்டும். மற்றும்,<br>• அடக்குமுறைச் செயலும் ஒரு நபருக்கு ஏற்படக்கூடிய தீங்கும் மற்றும் அத்தீங்கின் கடுமையும் ஒன்றுக்கொன்று சரிசமமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். | ✓ |



## F2. பராமரிப்புத் திட்டங்கள்

ஒரு பராமரிப்புத் திட்டம் என்பது மனநலத்திறன் குறைபாடுள்ள ஒரு நபருக்காக செய்யப்படும் பராமரிப்பு ஏற்பாடுகளை நுணுக்கமாக விவரிக்கும் ஓர் ஆவணம். அது கீழ்க்கண்டவர்களால் தயாரிக்கப்படலாம்:

- பலவகைக் கல்வித்துறைகளைச் சேர்ந்த தொழில்முறை நிபுணர் குழு (பல்வேறு செயல் திறன் வாய்ந்த தனி நபர்கள், உதாரணமாக மனநல மருத்துவர்கள், உடற்பயிற்சி சிகிச்சையாளர்கள், முதுமையியல் மருத்துவர்கள்);
- நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) கீழ் தனியாள் நலன் அதிகாரம் பெறுநர்கள் (அந்நபர் ஒருவரை நியமித்திருந்தால்); மற்றும்
- அந்நபரின் உறவினர்கள்.

பராமரிப்புத் திட்டத்தில் பரிந்துரைக்கப்படும் பராமரிப்பு அல்லது சிகிச்சையை ஒட்டிய செயல்களுக்கு அந்நபர் இணக்கம் தெரிவிக்க அவரது மனநலத்திறன் மதிப்பீடு எல்லா பராமரிப்புத் திட்டங்களிலும் உள்ளடக்கப்பட வேண்டும். இடர் மதிப்பீடுகளும் அதில் உள்ளடக்கப்படவேண்டும் மற்றும் இந்த இடர்களை முடிந்த அளவு குறைக்க அல்லது தடுக்க எடுக்கப்படத் தேவையான ஏற்ற நடவடிக்கைகளையும் குறிப்பிட வேண்டும்.

பராமரிப்பு ஏற்பாடுகள், சம்மந்தப்பட்ட நபரின் மிகச் சிறந்த நலனுக்காக இருக்க வேண்டும். ஏற்ற பராமரிப்புத் திட்டம் சரிவர இருக்கும் நிலையில் சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு ஊழியர் பொதுவாக அதனை அனுசரித்து செயல்படுவர். ஆயினும், அந்நபருக்கு இன்னும் மனநலத்திறன் குறைபாடுள்ளதா, செய்யப்படும் செயல் தொடர்ந்து அவரது மி கச் சிறந்த நலனுக்காகவே உள்ளதா என்று தீர்மானிக்க அவர்கள் அந்நபருடன் தொடர்ந்து தொடர்புகொள்ள எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். அந்நபர் ஒரு திட்டவட்டமான முடிவு செய்ய அவருக்கு உள்ள மனநலத்திறனைக் குறித்து சீரான இடைவெளிகளில் சோதனைகள் செய்யப்படவேண்டும். மனநலத்திறன் குறைபாடுள்ள நபரின் சூழ்நிலைகள் மாறி அதன் மூலமாய் மனநலத்திறன் மற்றும் மிகச் சிறந்த நலன் மதிப்பீடுகளின் மீது ஆழமான தாக்கத்தை உண்டு பண்ணலாம். பராமரிப்புத் திட்டங்கள் சம இடைவெளிகளில் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.



# பகுதி G

## மேல் விவரங்களை நான் எங்கு தேடலாம்?

சில வேளைகளில் பராமரிப்பளர்கள் (துணை அதிகாரம் பெறுநர்கள் உள்பட) ஒருவருக்கான பராமரிப்பு அல்லது சிகிச்சை அல்லது நிதி விவகாரங்களை எவ்வாறு கையாளுவது போன்றவற்றை குறித்து கருத்து வேறுபாடு கொண்டிருக்கலாம். பெரும்பாலான இச்சச்சரவுகள் மற்ற முறைகளான வழக்குக் கலந்தாலோசனைகள், மத்தியஸ்தம் அல்லது முறையான புகார் போன்ற நடவடிக்கைகளின் மூலம் இணக்கமாகத் தீர்க்கப்பட வேண்டும். இம்மாற்று வழிகள் செலவைக் கட்டுப்படுத்தும் வகையில் அமைவதோடு சர்ச்சையை நியாயமாகவும், விரைவாகவும் தீர்க்க உதவலாம்.

ஒரு சர்ச்சையைத் தீர்ப்பதற்கு உங்களுக்கு உதவக்கூடிய சாத்தியமான அமைப்புகளின் பட்டியல் வருமாறு.

| அமைப்பு | தொலைபேசி | விலாசம் | இணையதளம் |
|---|---|---|---|
| பெற்றோர் பராமரிப்பு ஆணையர் அலுவலகம் | 1800 222 0000 | 8 Lengkok Bahru<br>#02-01, Family Link @ Lengkok Bahru<br>Singapore 159052 | www.maintenanceofparents.gov.sg |
| சமுதாய வைத்திய மையம் | 6325 1600 | 100 High Street<br>#03-02, The Treasury<br>Singapore 179434 | www.cmc.gov.sg |
| சிங்கப்பூர் சமூக ஊழியர்கள் சங்கம் | 6778 7922 | Blk 324 Clementi Avenue 5<br>#01-209<br>Singapore 120324 | www.sasw.org.sg |
| சிங்கப்பூர் பல் மருத்துவர்கள் கழகம் | 6355 2405 | 16 College Road<br>#01-01, College of Medicine Building<br>Singapore 169854 | www.sdc.gov.sg |
| சிங்கப்பூர் பல் மருத்துவர்கள் சங்கம் | 6220 2588 | 2 College Road<br>Level 2, Alumni Association<br>Singapore 169850 | www.sda.org.sg |
| சிங்கப்பூர் மருத்துவக் கழகம் | 6223 1264 | 2 College Road<br>Level 2, Alumni Medical Centre<br>Singapore 169850 | www.sma.org.sg |
| சிங்கப்பூர் மத்தியஸ்த மையம் | 6332 4366 | 1 Supreme Court Lane<br>Level 4<br>Singapore 178879 | www.mediation.com.sg |
| சிங்கப்பூர் மருத்துவ மண்டலி | 6372 3093 | 16 College Road<br>#01-01, College of Medicine Building<br>Singapore 169854 | www.smc.gov.sg |
| சிங்கப்பூர் தாதியர் குழு | 6478 5400 | 16 College Road<br>#01-01, College of Medicine Building<br>Singapore 169854 | www.snb.gov.sg |
| சட்ட உதவிக் குழு | 1800 325 1424 | 45 Maxwell Road<br>#08-12,<br>URA Centre East Wing<br>Singapore 069118 | www.lab.gov.sg |
| சிங்கப்பூர் சட்ட சமூகம் | 6538 2500 | 39 South Bridge Road<br>Singapore 058673 | www.lawsociety.org.sg |

# விளக்கச்சொற்கள்

## பராமரிப்பு அல்லது சிகிச்சை தொடர்பான செயல்கள்

பராமரிப்பு அல்லது சிகிச்சை தொடர்பான செயல்களுக்கு ஒப்புதல் தெரிவிக்கும் திறனை இழந்தவர்களுக்குப் பராமரிப்பாளர்கள் (ஊதியம் பெறும் / பெறாத), சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் மேற்கொள்ளும் சுய பராமரிப்பு அல்லது மருத்துவச் சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கும் பணிகளை இது குறிக்கிறது.

## மிகச் சிறந்த நலன்கள்

மனநலத்திறனை இழந்தவரின் சார்பாக ஒரு முடிவை எடுக்கும் முன்பு அவருக்கு எது சிறந்தது என்பதில் கவனம் செலுத்தும் பல காரணிகளைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய கடமை முடிவெடுப்போருக்கு உள்ளது. மேலும் தகவல் பெற சட்ட நடைமுறை விதித் தொகுப்பின் 6-ஆம் அத்தியாயத்தைக் காண்க.

## நடைமுறை வழக்குத் தொகுப்பு

இந்தத் தொகுப்பு மனநலத் திறன் சட்டத்திற்கு (சட்டம்) ஆதரவு அளிக்கிறது மற்றும் சட்டத்தை நடைமுறையில் எப்படி அமல் செய்வது என்பதைப் பற்றி மேலும் விளக்கத்தை அளிக்கிறது.

## முடிவெடுப்பவர்

மனநலத்திறன் குறைபாடுள்ளவர்களின் சார்பாக முடிவுகளைச் செய்யும் ஒரு தனி நபர் அல்லது ஓர் ஆள் ஆகியோர் முடிவெடுப்பவர்களாவர். இவற்றில் பராமரிப்பாளர்கள், தாதிகள், மருத்துவர்கள், நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் (LPA) அதிகாரம் பெறுநர்கள் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட துணை அதிகாரம் பெறுநர்கள் ஆகியோர் அடங்குவர்.

## துணை அதிகாரம் பெறுநர்

மனநலத்திறன் குறைபாடுள்ள ஒருவரின் சார்பாக குறிப்பிட்ட முடிவுகள் எடுக்க ஒரு துணை அதிகாரம் பெறுநர் நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார். மனநலத்திறன் குறைபாடுள்ளவர் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வைச் செய்யவில்லை என்றாலும், அவரது சார்பாக அம்முடிவுகளை எடுக்க ஒரு அதிகாரம் பெறுநர் இல்லையென்றாலோ நீதிமன்றம் இந்நியமனத்தைச் செய்கிறது. ஒரு துணை அதிகாரம் பெறுநர், மனநலத்திறன் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டபடி பொறுப்பாண்மை நிறுவனங்கள் சட்டம் (அத்தியாயம் 336) -ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது போல் ஒரு தனி நபராகவோ அல்லது சொத்து மற்றும் விவகாரங்களுக்கு உரிமம் பெற்ற ஒரு பொறுப்பாண்மை நிறுவனமாகவோ இருக்கலாம்.



## அதிகாரம் வழங்குநர்

குறைந்தது 21 வயதுடைய நபர், தான் ஏதாவது ஒரு நாள் தனக்கு மனநலத் திறன் குன்றினால் தனது தனியாள் பொதுநலன் மற்றும் / அல்லது ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வை நியமிக்கும் நபர்.

## அதிகாரம் பெறுநர்

தங்களுக்கு சொந்த விவகாரங்களை நியமிக்க இயலாதவாறு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் போது தங்களின் சார்பாக தங்களின் சுய நல்வாழ்வைப்பற்றி மற்றும்/அல்லது சொத்து மற்றும் அலுவல் விவகாரங்களைக் குறித்து முடிவுகளை எடுக்கவும் அதிகாரம் வழங்கும் தனி நபர்களால் நியமிக்கப்படுபவர்களே அதிகாரம் பெறுநர்கள்.

## மாறுபடும் மனநலத்திறன்

மனநலத்திறன் அவ்வப்போது மாறுபடும்போது, எடுத்துக்காட்டுக்கு நல்ல நிலையிலிருந்து மோசமான நிலைக்கும், மோசமான நிலையிலிருந்து நல்ல நிலைக்கும் மாறும்போது அவருக்கு மாறுபடும் மனநலத்திறன் உள்ளதாகப் பொருள்படும். அது நிலையற்று இருக்கும். டிமென்சியா என்னும் நினைவாற்றல் இழப்பு நோயின் ஆரம்பக் கட்டத்தில் உள்ளவர்கள் அல்லது ஸ்கிஸோஃப்ரினியா என்னும் மனநோயால் அவதிப்படுபவர்கள் ஆகியோர் மாறுபடும் மனநலத்திறனை அனுபவிக்கலாம்.

## முறையான மதிப்பீடு (மனநலத்திறனைக் குறித்தது)

இவ்வகையான மதிப்பீடுகளைச் செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள ஒரு பதிவு செய்யப்பட்ட தொழில்முறை மருத்துவர் அல்லது மனநலச் சுகாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றுள்ள மனநல மருத்துவர்கள் போன்றோர் முறையான மதிப்பீடுகளைச் செய்வர். கணக்காளர் போன்ற தொழில் வல்லுநரோ அல்லது ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) யின் அறங்காவலரோ ஒரு முறையான மதிப்பீட்டை நாடலாம். அந்நபரின் மனநலத்திறனில் அவர்களுக்குச் சந்தேகம் ஏற்படும் சூழ்நிலையில், அந்நபர் செய்ய வேண்டிய முடிவு முக்கியமானதாக இருந்தாலோ அல்லது முடிவின் பேரில் ஒரு சர்ச்சை எழக்கூடும் என்று நம்பினாலோ முறையான மதிப்பீட்டை நாடலாம்.

## துன்புறுத்தல்

சட்டத்தின் கீழ் துன்புறுத்தல் என்பது 16 வயதாவது பூர்த்தியான மனநலத்திறன் குறைபாடுள்ள அல்லது மனநலத்திறன் குறைபாடுள்ளவர் என்று குற்றம் புரிந்தவர் நியாயமாக நம்புகின்ற நபர்களைத் தவறாக நடத்துவதாகும். உடலளவில், பாலியல் முறையில், மனதளவில் தவறாக நடத்துவது, கவனிப்பின்மை மற்றும் புறக்கணிப்பு மற்றும் விட்டுவிடுதல் ஆகியவை துன்புறுத்தலில் அடங்கும்.

## நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA)

ஒரு அதிகாரம் வழங்குநர் அவருக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும்போது, குறிப்பிட்ட முடிவுகளை அவரது சார்பாகச் செய்ய ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களையோ அவர் தன் சுயவிருப்பத்துடன் நியமிக்க அனுமதி வழங்கும் ஒரு சட்டம் சார்ந்த பத்திரம் இது.

## உயிர் வாழ் சிகிச்சை

நலப் பராமரிப்பு வழங்கும் ஒரு நபரின் கருத்தில் ஒருவரது உயிரை நிலைக்கச் செய்ய மேற்கொள்ளப்படும் சிகிச்சையே உயிர் வாழ் சிகிச்சை.

## மனநலத்திறன்

திட்டவட்டமான ஒரு முடிவை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எடுக்க ஒரு நபருக்குள்ள ஆற்றலே மனநலத்திறன் என்பதாகும்.

## பொதுக் காப்பாளர் அலுவலகம்

மனநலத்திறன் சட்டத்தின் கட்டமைப்பின் ஊடே பொதுக் காப்பாளரின் அலுவலகத்திற்குப் பரந்தகன்ற பொறுப்புகள் உள்ளன. இவற்றில் நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) பதிவேட்டை நிர்வகிப்பது, துணை அதிகாரம் பெறுநர்களை மேற்பார்வையிடுவது மற்றும் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளைப் புலன் விசாரணை செய்வது ஆகியவை அடங்கும்.

## நிரந்திரத் திறன் குறைபாடு

ஒருவர் நீண்ட காலம் குறைபாட்டினால் அவதியுற்றால் அது நிரந்தரக் குறைபாடு என்று பொருள்படும். நிரந்தர ஆழ்நிலை மயக்கம், தன் செயலான தசைகளின் முழுவாத நிலை போன்றவற்றால் அவதியுறுவோரும் உதாரணத்தில் அடங்குவர்.

## தனியாள் நலன் அதிகாரம் பெறுநர்

அதிகாரம் வழங்கும் ஒருவர் (அதிகாரம் வழங்குநர்) தனக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் சூழலில், தனியாள் நலன் விவகாரங்களில் அவரே முடிவுகள் செய்ய இயலாதபோது அவரது சார்பாக அம்முடிவுகளைச் செய்ய ஒரு நீண்டகால அதிகாரப் பத்திரம் (LPA) வின் கீழ் அவர் நியமிக்கும் ஒரு தனி நபரே ஒரு தனியாள் நலன் அதிகாரம் பெறுநர். அதிகாரம் வழங்குநர் எங்கு வசிக்க வேண்டும், அதிகாரம் வழங்குநரோடு யார் தொடர்பு வைத்துக்கொள்ளலாம் அல்லது தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது போன்ற வாழ்க்கைமுறை தொடர்பான முடிவுகள் தனியாள் நலன் முடிவுகளாகும்.



## சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர்

அதிகாரம் வழங்கும் ஒருவர் தனக்கு மனநலத்திறன் குறைபாடு ஏற்படும் சூழலில், சொத்து மற்றும் அலுவல் விவகாரங்களைக் குறித்து அவரே முடிவுகள் செய்ய இயலாதபோது அவரது சார்பாக அம்முடிவுகளைச் செய்ய ஒரு நீண்ட கால அதிகாரப்பத்திரத்தின் (LPA) கீழ் அவர் நியமிக்கும் ஒரு தனி நபர் அல்லது பொறுப்பாண்மை நிறுவனங்கள் சட்டத்தின் அத்தியாயம் 336 கீழ் உரிமம் பெற்ற பொறுப்பாண்மை நிறுவனம் ஆகியோர் சொத்து மற்றும் அலுவல் அதிகாரம் பெறுநர்களாவர்.

## அடக்குமுறைச் செயல்கள்

தன் மீது பயன்படுத்தப்படும் பலாத்காரத்தை எதிர்க்கும் ஒருவரின் மீது ஒரு நபர் பலாத்காரத்தை பயன்படுத்துவதும், பலாத்காரம் பயன்படுத்தப்படும் என்ற மிரட்டல் விடுப்பதும் அல்லது அவ்வொருவர் எதிர்த்தாலும் எதிர்க்காவிட்டாலும் அவர் சுதந்திரமாக நடமாடுவதைக் கட்டுப்படுத்துவதும் அடக்குமுறைச் செயல்கள் ஆகும். உடல் சார்ந்த பலாத்காரமோ, உடல் சார்ந்த பலாத்காரம் பயன்படுத்தப்படும் என்ற மிரட்டலோ இல்லாமலும் ஒருவரை அடக்க முடியும்.

## சட்டபூர்வ நெறிகள்

மனநலத்திறன் குறைபாடுள்ள அல்லது மனநலத்திறன் குறைபாடு ஏற்படக்கூடியவர்களுடன் தொடர்புகொள்ளும் போது மனநலத் திறன் சட்டத்தின் கீழ் ஐந்து சட்டபூர்வ நெறிகளை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

## விவேகமற்ற முடிவு

இது சட்டபூர்வ நெறிகளில் ஒன்றைக் குறிக்கிறது. மனநலத்திறன் உள்ள ஒரு நபருக்கு மற்றவர் நோக்கில் விவேகமற்றது என்று புலப்படும் ஒரு முடிவை எடுக்கும் உரிமை உள்ளது. எடுக்கப்படும் முடிவு அறிவுப்பூர்வமற்றதாக இருப்பதால் அந்நபர் மனநலத்திறனை இழந்துவிட்டார் என்று பொருள்படாது.

# குறிப்புகள்

**பொதுக் காப்பாளர் அலுவலகம்**
**OFFICE OF THE PUBLIC GUARDIAN**
Ministry of Social and Family Development
3 பீஷன் இடம் #03-00
CPF பிஷன் கட்டிடம்
சிங்கப்பூர் 579838
**தொலைபேசி:** 1800 111 2222
***மின்னஞ்சல்:*** enquiry@publicguardian.gov.sg
**இணைதளம்:** www.msf.gov.sg/opg

*இரண்டாம் பதிப்பு*
*அச்சிடப்பட்டது ஏப்ரல்* 2014

OFFICE OF THE PUBLIC GUARDIAN

MSF MINISTRY OF SOCIAL AND FAMILY DEVELOPMENT